5th August 1966]

(இ) கட்டுமரம் கட்டுவதற்கு என்னென்ன மரங்கள் உபயோகிக்கப்படுகின்றன?

(உ) கட்டுமரத்திற்குத் தேவையான அலிபீஸ்யா மரம் வேண்டிய அளவு கிடைப்பதில்லை என்ற தகவல் சர்க்காருக்குக் கிடைத்திருக்கிறதா ?

(எ) தேவையான அளவு அலிபீஸ்யா மரம் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) இம் மாநிலத்தில் ஏறக்குறைய 28,000 கட்டு மரங்களும், 5,000 வள்ளங்களும் உள்ளன.

(இ) இம் மாநிலத்தில் உள்ள மீனவர்கள், கட்டுமரங்களைக் கட்ட மலைவேம்பு, வாகை போன்ற மரங்களின் கட்டைகளைப் பயன்படுத்துகின்றனர்.

(உ) இல்லை; சேலம், கோவை மாவட்டங்களிலுள்ள காடுகளிலும், கேரளத்திலுள்ள காடுகளிலும் வாகை மரம் கிடைக்கின்றது. இவற்றை மீனவர்கள் இவ்விடங்களிலிருந்து சாதாரணமாக வாணிக முறையில் பெறுகின்றனர்.

(எ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஸார், கட்டுமரங்கள் கட்டுவதற்கான தேவைப்படுகிற மரங்கள் இலங்கையிலிருந்து வந்து கொண்டு இருந்தன. இப்போது அதற்குத் தடை இருப்பதாகத் தெரிகிறது. இதைப் பற்றியுள்ள விவரங்களை அரசாங்கம் பரிசிலனை செய்துள்ளதா ?

கனம் திரு. கோ. பூவராகன் : உண்மையில் முன்னால் இலங்கையிலிருந்து மரங்கள் வந்து கொண்டிருந்தன. இப்போது தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், கட்டுமரங்கள் கட்டுவதற்கான மரங்களைப் பெறுவதில் சங்கடம் ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை.

* 136 **கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் 1965-66-ல் எத்தனை இயந்திரப் படகுகள் தயாரிக்கப்பட்டுள்ளன ?

(இ) 1966-67-ல் எத்தனை தயாரிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) 1965-66-ல் 30 அடி நீளமுள்ள 108 படகுகளும், 32 அடி நீளமுள்ள 35 படகுகளும் கட்டப்பட்டன.

(இ) 1966-67-ல் 30 அடி நீளமுள்ள 100 படகுகளும், 32 அடி நீளமுள்ள 40 படகுகளும், 36 அடி நீளமுள்ள 10 படகுகளும் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : கட்டப்பட்ட படகுகள் முழுமையும் விநியோகிக்கப்பட்டு விட்டதா? பாக்கி ஏதேனும் இருக்கிறது என்றால் இதுவரை விநியோகிக்கப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம் ?

கனம் திரு. கோ. பூவராகன்: கட்டப்பட்ட பாகுகள் எல்லாம் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. விநியோகிக்கப்படாமல் ஒன்றும் இல்லை.

Chinnangudi-Akkur Mukkuttu Road

*137 *Q.*—Sri K. R. SAMBANDAM: Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(*a*) whether any representation has been made by the Chinnangudi fishermen in Mayuram taluk about the metalling of Chinnangudi to Akkur-Mukkuttu road connecting many villages viz., Kalamanallur, Kidangal and so on; and

(*b*) if so, the action taken thereon?

கனம் திரு. கோ. பூவராகன்: (அ) ஆம்.

(இ) ஆக்கூர் முக்கூட்டிலிருந்து கிடங்கல், கலமநல்லூர், வழியாகச் சின்னக் குடிக்குச் செல்லும் சுமார் 4 மைல் நீளமுள்ள சாலையை அமைப்பதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இவ் வேலை இப்போது நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளது.

திரு. கி. இரா. சம்பந்தம்: அந்த ரோடுகளுக்கிடையே இருக்கின்ற வடிகால்களுக்குப் பாலம் கட்டபட வேண்டியிருக்கிறது. அதையும் இதோடு தொடர்ந்து கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறதா?

கனம் திரு. கோ. பூவராகன்: ரோடு வேலையோடு சேர்ந்தது தான்.

உப்பனுற்றின் மீது பாலம்

*138 கேள்வி.—**திரு. நா. இராசாங்கம்:** கனம் செய்தி விளம்பரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென் ஆர்க்காடு மாவட்டம், கூடலூர் தாலுகா கடலோரப் பகுதியிலுள்ள உப்பனுற்றின் மீது பாலம் கட்டும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்திடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது வேலை ஆரம்பமாகும்?

கனம் திரு. கோ. பூவராகன்: (அ) & (இ) இவ்வேலை தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

திரு. நா. இராசாங்கம்: கனம் சபாநாயகர் அவர்களே, உப்பனுற்றில் பாலம் கட்டுவதற்கான வேலைகள் தொடங்கப்பட்டன. இப்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. இந்த வேலை போட்டியின் காரணமாக நிறுத்தப்பட்டிருக்கிறதா, அல்லது சர்க்காருடைய ஏற்பாட்டினுல் நிறுத்தப்பட்டிருக்கிறதா?

கனம் திரு. கோ. பூவராகன்: போட்டியின் காரணமாக எந்த வேலையும் நிறுத்தப்படவில்லை. மத்திய சர்க்காரிடத்தில் மொத்த ரோடு வேலைக்காக ரூ. 25 லட்சம் கேட்டிருந்தோம். அதற்கு